सुगन्धवनमाहात्म्यम्

சுகந்தவனமாகாத்மியம்

(108 திருப்பதிக்கோவை, சிவக்ஷேத்திரமகிமை, ஸர்வபுராண ஸாரஸங்க்ரஹம் ஆகியவற்றுடன்)

S.18855

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 589

सुगन्धवनमाहात्म्यम्

சுகந்தவனமாகாத்மியம்

(108 திருப்பதிக்கோவை, சிவக்ஷேத்திரமகிமை,
ஸர்வபுராண ஸார ஸங்க்ரஹம் ஆகியவற்றுடன்)

பதிப்பாசிரியர்:

முனைவர் ஆ. வீரராகவன், M.A.,B.L.I.S. Ph. D.,
சம்ஸ்கிருத பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும் ஆய்வு மையம்

தஞ்சாவூர்.

2017] [**விலை ரூ.110-00**

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சுகந்தவனமாகாத்மியம்
பதிப்பாசிரியர்	:	முனைவர் ஆ. வீரராகவன்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	589
மொழி	:	சம்ஸ்க்ருதம், தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2017
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 x 14 செ. மீ.
பக்கங்கள்	:	180
படிகள்	:	500
எழுத்து	:	16 & 12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	தலபுராணம்
ISBN	:	978-93-85343-27-8
விலை	:	ரூ. 110-00

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் கலை, இலக்கியம், வரலாறு போன்ற பல்வேறு துறை சார்ந்த செய்திகளைப் பல்லாண்டுக்கால பயன்பாடு கருதி ஓலைச் சுவடிகளிலே பதிவு செய்துள்ளார்கள் நம் ஆன்றோர்கள். அவற்றை புத்தக வடிவில் யாத்து மக்களிடம் கொண்டு சேர்க்கும் பெரும்பணியை இந்நூலகம் தொன்றுதொட்டுச்செய்துவருகின்றது.

சரசுவதி மகால் நூலக சம்ஸ்க்ருதத்துறையில் 'சுதந்தவனமாகாத்மியம்' என்னும் சுவடி B.No. 11318/ D.No. 10545 என்ற எண்ணில் பதிவிடப்பட்டுள்ளது. இக்கதை இலக்கியத்திற்கு துணைபுரிகின்ற வகையில்108 திருப்பதிக்கோவை, சிவக்ஷேத்திர மஹிமை, சர்வபுராண சாரஸங்கிரஹம் ஆகிய மூன்று சுவடிகளும் இத்துடன் இணைத்து பதிப்பிக்கப்பெற்றுள்ளது. சுகந்தவனம் என்பது கும்பகோணத்திலிருந்து வடக்கே 5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்து விளங்கும் கடிச்சம்பாடியைக் குறிக்கிறது. கடிச்சம்பாடி என்ற சொல்லிற்கு பொருள் கூறுகின்ற வகையில் கலியுகத்தினில் ஜனங்களால் பாடல் பெற்றதை அடிப்படையாகக் கொண்டு அவ்வூர் 'கலிச்சனம்பாடி' என்று தமிழ்மொழியில் சுவடியின் மேல் எழுதப்பட்டுள்ளது. நறுமணமுள்ள மரங்கள் அடர்ந்தும், நந்தவனம், அன்னமுலவும் அழகிய நீர்ப்பொய்கை ஆகியவை அத்தலத்தில் காணப் படுவதால் 'சுகந்தவனம்' என்றும் அவ்வூர் அழைக்கப்படுகின்றது. அத்தலத்தின் பெருமை மூன்று அத்தியாயங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை விளக்குவதால் அதை விளக்கும் சுவடி 'சுகந்தவன மாகாத்மியம்' என்றழைக்கப்படுகின்றது.

'சுகந்தவன மாகாத்மியம்' என்ற சுவடி நூலாக்கம் பெற்று தமிழ்பொழிப்புரையுடன் முதற்பதிப்பாக வெளிவருகிறது. இத்துடன் 108 வைணவத்தலங்கள் பற்றிய தமிழ்ச்சுவடிப்பதிப்பும், காவிரியாற்றின் இருமருங்கிலும் அமைந்த பாடல் பெற்றதும் வைப்புத்தலங்களாகக் கருதப்படுவதும், பாடல் பெறாததுமான சிவத்தலங்களின் குறிப்புகளும், மகாபுராணம் மற்றும் உபபுராணங்களில் கூறப்பட்ட ஆன்மீகம் சார்ந்த கருத்துக்களும் காணக் கிடைக்கின்றன. இந்நூலின் பதிப்புப் பணியை செவ்வனே செய்தளித்த இந்நூலக சம்ஸ்க்ருதப்பண்டிதர் முனைவர் A. வீரராகவன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. மா.இராமகிருட்டினன், எம்.ஏ.,எம்ஃபில்.,எம்.எட்., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன். M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், ஒளியச்சு மற்றும் கணினி அச்சகப்பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூல் ஆன்மீக அன்பர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், பெரிதும் பயன் அளிக்கும்.

தஞ்சாவூர்
24.12.2017

ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

முன்னுரை

தஞ்சைத் தரணிபுகழ் சரசுவதி மகால் நூலகத்தில் பல்வேறு வகைச்சுவடிகள் பாதுகாக்கப்படுவதோடு அவற்றை நூலாக்கம் செய்யும் பெரும்பணியையும் இந்நூலகம் தொடர்ந்து செய்து வருகிறது. அவ்வகையில் சுகந்தவனமாகாத்மியச் சுவடி தரும் செய்திகள், அதன் பதிப்புமுறை ஆகியன குறித்துச் சிறிது பார்ப்போம்.

கடிச்சம்பாடி

கும்பகோணத்திலிருந்து வடக்கே 5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்து விளங்குகிறது கடிச்சம்பாடி. கரிச்சான்பாடி எனவும் அழைக்கப்படுகிறது. சுகந்தவன மாகாத்மியம் கூறும் ஓலைச்சுவடியின் முகப்பு ஏட்டில் **"சோழவரம் சீமை கலிச்சனம்பாடி வெங்கடேச்வரப் பெருமாள் தளபுராணம், பிரமாண்ட புராணத்தில் அத்யாயம் 3, அம்மன் பேரு சவுந்தரவல்லியம்மாள்"** என்று அவ்வூர் மற்றும் இறைவன் இறைவியின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. "கிரேத திரேத துவாபர கலியுகம்" ஆகிய இவை நான்கில் கொடியது கலியுகமாகும். அதனைத் திருத்திப்பணி செய்ய "கலியும் கெடும் கண்டுகொள்மின்" என்ற நம்மாழ்வார் திருவாக்குப்படி கலியுகக் கொடுமை தீர்க்கும் கண்ணனாக திருவேங்கடமுடையானாகவே முன்னோர்கள் இந்த எம்பெருமானைப்பாடிப் புகழ்ந்துள்ளனர். திருமலை வேங்கடேசனின் உருவ அமைதியில் இங்கே நாம் கருவறை மூர்த்திதனைக்கண்டு மகிழ்கிறோம். '<u>கலி + சனம் + பாடி</u>' கலியுகக் கொடுமைகள் தீர (ச)ஜனங்கள் ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாளை பாடிய தலமாதலால் இவ்வூருக்கு கடிச்சம்பாடி என்ற பெயரைவிட

'கலிச்சனம்பாடி' என்பதே மிகப் பொருத்தமானதாகவும், அரியதும், சிறந்ததுமாக அமைகின்றது.

சுகந்தவன மாகாத்மியம்

நறுமண மரங்கள் இங்கே மிகுதியாய் உள்ளதால் இவ்வூர் சுகந்தவனம் என்று போற்றப்பட்டுள்ளது. ஆகவே இத்தலநாதன் ஸ்ரீ செளந்தரராஜன் **'சுகந்தவனநாதன்'** என்று அழைக்கப்படுகிறார். சுகந்தவன தலத்தின் பெருமை உரைக்கும் இந்நூல் சுகந்தவன மாகாத்மியம் ஆகும். கருவறையில் காட்சிநல்கும் ஸ்ரீ செளந்தரராஜ பெருமாளும் அவரது இடப்புறம் இலங்கும் பூமிதேவியும் சோழர்காலப் பழமைவாய்ந்தவர்கள். வலப்புறம் காணப்படும் ஸ்ரீதேவி மட்டும் பிற்காலத்தியவர் ஆவார். தனிக்கோயில் நாச்சியார் செளந்தரவல்லி. எம்பெருமானுக்கு ஸ்ரீ வைகானஸ ஆகமப்படி பூசைமுறையினையும் அந்நூல் குறிப்பிடுகின்றது. பிரம்ம தேவருக்கு இத்தலத்தில் எம்பெருமான் காட்சிதந்ததால் இத்தலத்திற்கு 'பிரம்மபுரம்' என்றும் மற்றொரு பெயருண்டு. பிருகு முனிவரும் இத்தலத்தில் எம்பெருமானைக் கண்டு போற்றியுள்ளார்.

தீர்த்தம்

இவ்வூரின்பாலமைந்துள்ள நந்தவனம் மற்றும் திருக்கோயிலுக்கு மேற்புறத்தில் புஷ்கரிணீ (திருக்குளம்) உள்ளது. அன்னமாடுலவும் அலைபுனல் அமைந்த அகன்று விரிந்த நீர்நிலை. இதன்கீழ்ப்புறம் பிருகுமுனிவர்தவம்செய்து தன்பாபம்நீங்கப்பெற்றார்என்கிறது இத்திருத்தலபுராணம். ஒரு சமயம் பிரம்மபுத்திரரான பிருகுமுனிவர் சத்வம், ரஜஸ்,தமஸ் என்கிற முக்குணங்களின் அடிப்படையில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுள் சிறந்தவர் யாரென சத்வபரீக்ஷையாக செய்யாதனசெய்து பாபத்திற்கு உள்ளானார்.

பாபக்கழிவிடையாக இத்தலம் மேவிய பிருகுமுனிவர் எம்பெருமானைக் குறித்து தவம் செய்து அவரை நேரில் கண்டார். பிருகு முனிவரால் தனது நீராட்டத்திற்கென தோற்றுவிக்கப்பட்ட இது **'பிருகுதீர்த்தம்'** என்றழைக்கப் படுகிறது. பிரம்மதேவர் இங்கே விஜயம் செய்து, அச்வமேத வேள்வியினைப் புரிந்து இறுதியில் இத்திருக்குளத்தில் அவபிருத நீராட்டம் புரிந்தார். ஆதலால் இதற்கு **'பிரம்மதீர்த்தம்'** என்பது மற்றொரு பெயராகும். மேலும் காவிரியின் வடகரையிலும், தக்ஷிணோத்தரகாவேரி (தென்வட காவிரிகொள்ளிடம்) ஆறுகளின் இடைப்பட்டதாயும் இத்தலம் அமைந்து இருப்பதை இவ்வூர்த்தலபுராணம் தெரிவிக்கிறது. இது கூகுள்படத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. கூகுள் படங்களும் கல்வெட்டு படங்களும் முறையே ix,x,xi ஆகிய பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

சுவடியின் காலம்

சுகந்தவன மாகாத்மியம் என்ற பெயரில் அமைந்த ஓலைச் சுவடியினை எழுதியவர் 'ஸௌம்ய வருடம், சித்திரை மாதம் 14 ஆம் தேதி ஸ்ரீ புரந்தானிலே இருக்கும் வைகானஸ சூத்திரத்திரத்தைச் சார்ந்த வேங்கடராமனின் புதல்வர் வேங்கடவரதனின் கையால் இது எழுதப்பட்டது' என தன்விவரக் குறிப்பினை இறுதியில் கொடுத்திருக் கின்றார். 1801 ஆம் ஆண்டு முதன்முதலாய் இயற்றப் பட்ட சரசுவதிமகால் ஓலைச்சுவடிகளின் விவரப்பட்டியலில் 'புராணம் 230, பிரமாண்ட புராணமந்து சுகந்தவன மாகாத்மியம், அத்யாயாலு 3, கிரந்தலிபி, ஆகளு 14' என்று கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இச்சுவடி 1801 ஆம் ஆண்டிற்கு முன்னரே சுமார் 200 வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு கிடைத்த குறிப்புகளின் அடிப்படையில் இச்சுவடி 1798ல் எழுதப்பட்டது என ஊஹிக்க முடிகிறது.

கொள்ளிடம் ஆறு கடிச்சம்பாடி காவிரி ஆறு



கல்வெட்டு-1

சுகந்தவனம்- b

கல்வெட்டு-2

கல்வெட்டு-3



நன்றி: கூகுள் நிறுவனம் - ஸ்ரீ சௌந்தரராஜ பெருமாள் தேவஸ்தானம், கடிச்சம்பாடி.

கல்வெட்டுகள்

இத்திருத்தலத்தின் பெருமாள்கோயில் மற்றும் சிவன்கோயில்களில் அமைந்தவையான இரு கல்வெட்டு களின் குறிப்புமட்டும் ARE,1931-1932/123-124ல் கொடுக்கப்பட்டுள்ளது. ஆழ்வார் சந்நிதியிலிருந்து ஒரு முழுமையற்ற துண்டுக் கல்வெட்டும் தற்போது கிடைத்துள்ளது. சிவன்கோயில் கல்வெட்டு கூகுள் வரைபடத்திலுள்ளது. மற்ற இரண்டும் இந்நூல் பதிப்பாசிரியரால் முயற்சிசெய்து இங்கே பதிவிடப் படுகிறது.

கல்வெட்டு:1 இடம்: ஸ்ரீசௌந்தரவல்லி நாச்சியார் சந்நிதி

இத்திருத்தலத்தின் பெருமாள்கோயில். இத்திருக்கோயிலின் தனிக்கோயில் நாச்சியார் சந்நிதி முகமண்டபநிலைக்காலில் தென்சிறகில் தலைகீழாய் பதிக்கப்பட்ட கல்வெட்டில் மொத்தம் 19 வரிகள் கிடைக்கின்றன. அந்த கல்வெட்டின் சிறுசிறுவரிகள் கீழ்வருமாறு- பெருமாள் சாரங்கபாணிக்கு திருமாலை சாத்துகிற ஆரா அழகர்தற்கும் தத்தமாயிருக்கயிற் செத்தநிலம் இருமா செறுவுமன்வயமாக திருமாலைப்புறம் யித்தன்மத்துக்கு யியாதாமொருத்தர் அகிதம் செய்தவன் உண்டா.... என்றவாறு முழுமையற்றதாய் விளங்குகின்றன.

கல்வெட்டு தரும் செய்தி

இத்திருக்கோயிலின் வெளிப்புறத்தின் தென்பகுதியில் ஒரு நந்தவனம் உள்ளது. இங்கிருந்து திருக்குடந்தை ஸ்ரீசார்ங்கபாணிப் பெருமாளுக்கு புஷ்பகைங்கர்யம்

செய்வதின்பொருட்டு இது திருமாலைப் புறமாக இவ்வூர் விடப்பட்டுள்ள செய்தியைக் குறிக்கிறது. மேலும் இங்கே அருள்புரியும் எம்பெருமான் 'ஆரா அழகர் (சௌந்தரராஜர்) பெருமாளுக்கும் இருமா நிலம் வழங்கப்பட்டுள்ளதையும் இந்த கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு:2

இடம்: ஸ்ரீமாசிலாமணி ஈச்வரர் மகாமண்டப கீழ் அடித்தளம்

ஸ்ரீமாசிலாமணி ஈச்வரர் மகாமண்டப கீழ் அடித்தளத்தில் உள்ள சிவன் கோயில் கல்வெட்டு ஆழிக்கல் சாசனமாக கூகுள் வரைபடத்தில் காணப்படுகிறது. அந்த கல்வெட்டின் வரிகள் கீழ்வருமாறு- ......சுக்ல வருடம், பங்குனி மாதம், ஸ்ரீ மன்மாஹாமண்டலேச்வர கம்பயதேவ.... என்றவாறு முழுமையற்றதாய் விளங்குகின்றன.

கல்வெட்டு:3 இடம்: ஆழ்வார்சந்நிதி துண்டுக்கல்வெட்டு

இராஜகோபுரத்தை யொட்டி வடசிறகில் மேற்கு பார்த்தவண்ணம் ஆழ்வார்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள சந்நிதிப்பகுதியில் மற்றுமோர் கல்வெட்டு கிடைத்துள்ளது. கல்வெட்டில் மொத்தம் 4 வரிகளே கிடைத்துள்ளன. அந்த கல்வெட்டின் வரிகள் கீழ்வருமாறு- .... அழகருக்கு நெய....ங்குல..... என்றவாறு முழுமையற்றதாய் விளங்குகின்றன. இந்த கல்வெட்டில் இத்திருக்கோயிலுக்கு தீபகைங்கர்யம் மேற்கொண்ட செய்தி கூறப்படுகின்றது. மேலும் இங்கே அருள்புரியும் எம்பெருமான் திருநாமம் அழகர் (சௌந்தரராஜர்) என்பதை உறுதி செய்கிறது. மூன்று

கல்வெட்டுகளின் முழுப்பகுதிகளும் கிடைத்தால் மேலும் சில செய்திகளை நாமறியலாம்.

பதிப்புமுறை

சுகந்தவன மாகாத்மியம் மூன்று அத்தியாயங்களைப் பெற்ற குறுநூலாகையால் தமிழில் எழுத்தாக்கம், பொழிப்புரை கொடுத்து பிற்சேர்க்கைகளாக 108 திருப்பதிக்கோவை, சிவக்ஷேத்திரமஹிமை, (வடமொழி &தமிழ்) காவேரி நீரோட்டத் தலங்கள், ஸர்வபுராண ஸாரஸங்கிரகம் ஆகியன இணைத்தும் பதிப்புப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதிப்பிற்குதவிய சுவடிகள்

சுகந்தவன மாகாத்மியம் (B.No.11318/D.No.10545) பதிப்புப்பணிக்கு குறிப்பிட்ட சுவடி மட்டுமின்றி மற்றும் சில குறுஞ்சுவடிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் அச்சில் அரிதாகக் கிடைக்கும் வங்கீபுரத்தாய்ச்சி இயற்றிய 108 திருப்பதிக்கோவை (No. 250, Tamil Section Mss.), தேவநாகரியில் அமைந்த சிவக்ஷேத்திரமஹிமை (B.No.8872/D.No. 22766), கிரந்த எழுத்து ஓலைச்சுவடியான ஸர்வபுராண ஸாரஸங்கிரகம் (NNB.No.15610/Tag No.II.156/D.No.10607) ஆகியன குறிப்பிடத் தக்கவை.

நன்றியுரை

இந்நூலைப்பதிப்பிக்க ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் திரு. ஆ. அண்ணாதுரை இ.ஆ.ப., அவர்களுக்கும்,

நூற்பணியினை செவ்வனே நிறைவேற்றிடத் துணைபுரிந்த திருச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் நிருவாக அலுவலர்(பொ.) திரு. மா. இராமகிருட்டினன், M.A.,M.Phil.M.Ed., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.,.Ph.D., அவர்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வூரைக்குறித்த கட்டுரையைப் பதிப்பித்தளித்த ‘சிவஒளி’ மாத இதழிற்கும், கடிச்சம்பாடி ஸ்ரீ சௌந்தரராஜ பெருமாள் நற்பணி மன்றத்திற்கும், திருப்பணிக் கமிட்டித்தலைவர் திரு. கண்ணன், கடிச்சம்பாடி திரு. R. அபூர்வசாமி, விண்ணாற்றங்கறை திரு. K. ஆராவமுதன், வரலாற்று ஆய்வாளர் திரு. தில்லை. கோவிந்தராஜன் ஆகியோர் களுக்கும் இத்தருணத்தில் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நூலகக்கணினி மற்றும் நூற்கட்டுப்பிரிவினருக்கும் என உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் தலவரலாறு ஆய்வுசெய்கின்றவர் களுக்கும், ஆன்மீகச் சொற்பொழிவாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயனளிக்கும்.

தஞ்சாவூர்
26 -11-2017

முனைவர். ஆ. வீரராகவன்
சம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

विषयानुक्रमणिका
பொருளடக்கம்

	பக்க எண்
1. சுகந்தவனமாகாத்மியம் அத்தியாயக்கதைச்சுருக்கம்	xvii-xxxii
2. सुगन्धवनमाहात्म्यम्	1-26
3. சுகந்தவனமாகாத்மியம் தமிழ் எழுத்தாக்கம்	27-46
4. பிற்சேர்க்கைகள் (अनुबन्धाः)	
I) நூற்றெட்டு திருப்பதிக்கோவை	47-56
II) शिवक्षेत्रमहिमा	57-74
II) a. சிவக்ஷேத்ரமஹிமை	75-97
III) காவேரி நீரோட்டத்தலங்கள்	98-99
IV) सर्वपुराणसारसङ्ग्रहः	100-126
IV) a. ஸர்வபுராணஸாரஸங்கிரஹம்	127-148

******

AN APPEAL

Manuscripts on Palmleaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The Manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar King of Tanjore, **Rajah Serfoji,** has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world famous **"Sarasvati Mahal Library".** It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

DISTRICT COLLECTOR AND DIRECTOR
Sarasvati Mahal Library,
Thanjavur.

ஸ்ரீ:

1. சுகந்தவன மாகாத்மியம் - கதைச்சுருக்கம்

முதல் அத்தியாயம்

கடவுள் வாழ்த்துப் பாக்களாக முதன்முதலில் மூன்று சுலோகங்கள் காணக்கிடைக்கின்றன.

வெண்பட்டாடை உடுத்தியவராயும், சந்திரன் போன்று ஒளிர்பவரும், நாற்கரம், அழகிய திருமுக மண்டலம் ஆகியவற்றையும் பெற்று விளங்குகின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவை இடையூறுகள் அனைத்தும் விலக தியானிக்கவேண்டும். *(1)*

உயர்மணி மகுடங்கள் புனைந்த தேவாசுரர்களின் திருமுடிகளைத் தாழ்த்தி வணங்கப்பட்ட பெருமையுடையதான சுகந்தவன நாதனான ஸ்ரீமகாவிஷ்ணுவின் சாசனமாக இது விளங்குகின்றது. *(2)*

கருமுகில் போல்வதோர் மேனியும், சூரிய சந்திரர்களாகிய கண்களையும், கோடிக்கணக்கான கதிரவனின் ஒளி, அஸ்திரங்கள், அம்பராத்தூணி, அழகிய வில் ஆகியவற்றைப் பெற்றவரும், காலனை வீழ்த்தவல்ல காலாக்னிபோல் ருத்திரமாகக் காட்சி தருபவரும், எதிரிகளின் குலத்தை எரிப்பவரும், இடையூறுகளை வெட்டி வீழ்த்துபவரும், அச்சம் தரும் அரிய செயல்களைப் புரிபவரும், அனைவரின் பயத்தைப் போக்குபவரும் ஆன ஸ்ரீராமச்சந்திரரை வணங்குகிறேன். ஸ்ரீசுந்தரராஜருக்கு வணக்கம். ஸ்ரீ ராமருக்கு வணக்கம். *(3)*

கடவுள் வாழ்த்தினைத் தொடர்ந்து சுகந்தவன மாகாத்மியம் மூன்று அத்தியாயங்களில் விவரிக்கப் படுகின்றது.

ஒரு சமயம் ரிஷிகள் சூதமுனிவரைப்பார்த்து, ‘மிகுந்த அறிவாளியாகிய தங்களால் கும்பகோணத்தின்* தலப் பெருமையும், தீர்த்தங்களின் சிறப்பும் உரைக்கப்பெற்றது. காவிரியாற்றின் வடகரை** பிருகு தீர்த்தம் அவற்றுள் விளக்கப்பட்டது. அந்த பிருகுதீர்த்தப் பெருமைகளை தற்போது விரிவாகத் தாங்கள் எடுத்துரைக்க வேண்டும்’ என்று வேண்டினர். சூதரும் முனிவர்களின் வேண்டுகோளையேற்று ‘பிருகுதீர்த்தத்தின் பெருமை எப்போதும் கேட்பவர் படிப்பவர் போன்றோர்களுக்கு பயமனைத்தும் நீங்கி எண்ணியவற்றை ஈடேறச் செய்கின்றது. அத்தீர்த்தம் பிருகுமுனிவரைத் தன் பாபத்திலிருந்து விடுதலை பெறச்செய்தது. அதன் பெருமைகளை விவரிக்கின்றேன். அன்புடன் இதைக் கேளுங்கள்’ என்றவாறே தொடர்கிறார்.

முன்பொருகால் மஹர்ஷிகள் யாவரும் சரசுவதி நதிக்கரையில் கூடினர். அப்போது தீர்கசத்ரம் எனும் வேள்வி நடைப்பெற்றது. இடையில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுள் சத்வகுணம் நிரம்பியவர் யார் ? என வாக்குவாதம் ஏற்பட்டது. அதனை அறியும் ஆவலுடன் பிருகுமுனிவர் எல்லோரையும் வேகமாகத் தத்தம் இருப்பிடம் அனுப்பிவிட்டு தான் மட்டும் பிரம்மதேவருடைய அவைக்கு விரைந்தார். தேவர்ஷி கூட்டங்களின் நடுவில் விளங்குகின்ற தன் தந்தையாகிற பிரம்மதேவரை அணுகிய பிருகுமுனிவர், அன்போடு வணங்குதலையோ தோத்தரித்தலையோ செய்யாமல் கௌரவக்குறைவாக நடந்துகொண்டார். பிருகுவைப்

---

* கும்பகோணம் முதலான 108 வைணவத்தலக்குறிப்புகளுக்கு பிற்சேர்க்கை 4. Iனைக்காண்க.

** காவிரி வடகரை, தென்கரை சிவத்தலக்குறிப்புகளை பிற்சேர்க்கை 4.II, 4.II a.யிலும், காவிரி நீரோட்டத்தலக்குறிப்பினை பிற்சேர்க்கை 4. III லும் காண்க.

பார்த்த பிரம்மதேவர் அவர்மீது சினங்கொண்டார். பிருகுமுனிவரும் பிரம்மதேவரை 'ரஜோகுணம் நிரம்பியவர்' என்றெண்ணி பூவுலகில் உமக்கு பூஜையே இருக்காது என சபித்துவிடுகிறார். பின் கைலாசம் செல்ல ஆங்கே பரமசிவன் பார்வதியோடு மனமகிழ்ந்து கொண்டிருந்தார். பிருகுமுனிவர் வந்ததை பரமசிவன் கண்டுகொள்ளவில்லை. பரமசிவனோ பிருகுமுனிவரை கோபத்துடன் கொல்ல முயல்கின்றார். பார்வதிதேவி பரமசிவனை சமாதானம் செய்ய, பூவுலகில் உமக்கு உருவ வழிபாடு இருக்காது என சாபமிட்டுவிடுகிறார் பிருகுமுனிவர். சிவபெருமான் 'தாமஸகுணம்' நிரம்பியவர் எனத் தீர்மானித்த பிருகுமுனிவர் ஸ்ரீவைகுந்தம் செல்கிறார். அவரது தவ ஒளியைக் கண்டு அஞ்சிய வாயிற்காப்பாளர்கள் பிருகு முனிவரைத் தடுக்கவில்லை. உடன் உள்ளே நுழைந்த பிருகுமுனிவர் அழிவற்றவரான ஸ்ரீஹரியைக் கண்டார். அவரது மடியில் திருமகள் யோகநித்திரையில் ஆழ்ந்திருந்தார். ஸ்ரீஹரி தன்னைப் பார்க்கவில்லை எனும் கோபத்தால் பிருகுமுனிவர் ஜகத்பதியான தேவதேவனின் இதயத்தில் காலால் உதைத்துவிடுகிறார். திருமாலோ வெனில்; கட்டிலிலிருந்து இறங்கி பிருகு முனிவரின் கால்களை வருடி அன்போடு உபசரித்தார். 'பிரம்மபுத்திரரே! உமது வருகையை யான் அறியவில்லை. லக்ஷ்மிதேவியுடன் தனிமையிலும் இருந்தேன். ஆதலின் யான் கண்டுகொள்ளாததை மன்னிக்கவேண்டும் தங்களின் பாததூளிபட்டதால் இவ்வுலகம் புனிதமாயிற்று. மார்பில் வஸிக்கும் மகாலட்சுமியும் இயல்பைவிட இன்னும் அதிகமாகவே மிளிருகின்றாள்' என்றார். அதைக்கேட்ட பிருகுமுனிவரும், 'சத்வகுணம் நிரம்பியவர்' ஆன உம்மை நான் பக்தியால் பார்க்கிறேன் என்று கண்ணீர் மல்க நாரணனிடத்தில் நடந்த நிகழ்வுகளை விவரித்தார். பிறகு

பிருகுமுனிவர் முனிவர்களின் கூட்டத்தை அணுகி நடந்தவற்றை விளக்கினார். பிருகுமுனிவரின் குற்றமற்ற மொழிகேட்டு முனிவர்கள் தேவாதிதேவனான நாரணனை வணங்கினர்.

பிரம்மபுத்திரரான பிருகுமுனிவரின் மனதில் முன்பொருகால் அறியாமையாலும் மூடத்தனத்தாலும் தான் செய்த தவறு நினைவிற்கு வந்தது. பரப்ரம்மனான திருநாரணன் மார்பில் காலால் உதைத்த செய்கை அவரை வாட்டியது. தவறான ஒரு செயலை பரீக்ஷையாக ஒருபோதும் செய்யக்கூடாதல்லவா ? அச்செயல் தம் பிறப்பிடத்தைச் சோதிப்பதற்கு இணையாகிறது. ஸர்வேச்வரனான அந்த திருநாராயணனிடத்தில் இந்த அபராதம் என்னுடைய மோகத்தினாலன்றோ செய்யப்பட்டது. என்னிடமிருந்த சாத்திரங்களின் புலமை எங்கே சென்றது? தவம் மேற்கொண்டாலும் நெஞ்சம் நிம்மதியடையவில்லை. நெஞ்சத்தின் நிறைவு எங்கே கிடைக்கும் ? அதைப்பெற எந்த தேசத்திற்கு நான் செல்லவேண்டும் என வருத்தமடைகிறார். அவ்வமயம் அவரது முன்னே அந்தணரொருவர் தோன்றி, புன்முறுவல் பூத்த முகத்துடன், பிருகுமுனிவரைப் பார்த்து, ‘முனிவரே ! நீர் எதற்காக வருந்துகிறீர் ? எல்லாமறிந்த நீவிர் வருந்தக் காரணமென்ன? என்பதைத் தெரிவியுங்கள். அதை நான் போக்குகிறேன்’ என்று சொல்ல, பிருகுமுனிவர் சற்று மகிழ்வெய்துகிறார். பிறகு பிருகுமுனிவர் ‘முன்பொருகால் தேவர்களால் மும்மூர்த்திகளுள் சிறந்தவர் யார்? என வாதிடப்பெற்றது. இதை அறிய விரும்பிய என்னால் விஷ்ணுவிடத்தில் அபராதம் செய்ய நேரிட்டது. அதனைத் திரும்ப சொல்வதாலும் பாதகமே விளையும். இருப்பினும் அதனைக்கூறியவராய் அத்தகைய பாபத்தினின்று விடுதலை எப்படி கிடைக்கும் ? நிம்மதியற்ற என் நெஞ்சம்

நிறைவடைய எங்கே செல்ல வேண்டும்? என்றும் கேட்டார். அதைக்கேட்ட அந்தணரும் பிருகு முனிவரைப் பார்த்து உலக நன்மையின் பொருட்டு பரதத்தவநிச்சயம் செய்யப்பட்டது. பரீக்ஷை செய்யவேண்டும் என்பதற்காக செய்யக்கூடாதவற்றில் அறிவைச் செலுத்தக்கூடாது. விஷ்ணுவிடம் குறைகாணும் புத்தியில் உறுதியாய் நின்ற நீ அதனின்று விடுதலை பெற அவரையே வணங்கி மகிழ்விக்கவேண்டும். அவரை மகிழ்வடையச்செய்து, உமது நெஞ்சம் நிறைவடைய 'ஸித்திக்ஷேத்திரம்' ஒன்றை உமக்குத் தெரிவிக்கின்றேன். பூவுலகில் சோள தேசத்தில் ஒரு பிரதேசமுள்ளது. அங்கே காவிரி இரு நதிகளாகப் பாய்கின்றது. அந்த தென் வடகாவிரியின் நடுவே கும்பகோணத்திலிருந்து வடக்கில் குரோசத்தொலைவில் ($2^1/_4$ மைல் தொலைவில்) அமைந்துதான் அந்த ஸித்தி க்ஷேத்திரம். அது நிரம்ப மரங்களால் அடர்ந்து காடுபோல் காட்சிதருகிறது. பூச்செடிகளைக் கொண்ட தோட்டமாக விளங்கும் அதன் இடையே தாமரைப்பூத்த தடாகம் ஒன்றுள்ளது. அந்த தடாகத்தின் கீழ்த்திசையில் தாங்கள் தவம் புரிவீராக. அங்கே மேற்கொள்ளும் தவம் உமது நெஞ்சத்திற்கு நிறைவினைத் தரும்' என்றுகூறி மறைந்தார். பிருகு முனிவரும் மிக்க மகிழ்ச்சியுடன் குறிப்பிட்ட தேசத்தைச் சென்றடைந்தார். அங்குள்ள தடாகத்தின் கரையில் தினமும் மூவேளை நீராடி தவம் இருந்தார். உக்கிரமான அவரது தவம் இந்திரனுக்குத் தன்பதம் போய்விடுமோ என்றஞ்சும் அளவு அமைந்திருந்தது. ஆதலால் பிருகுமுனிவரின் தவத்தினைக் கலைக்க ஊர்வசீ முதலான தேவலோகப் பெண்டிர்களை இந்திரன் அனுப்பி வைக்கிறான். தவத்தினைக் கலைக்க இயலாமல் அவர்கள்

மேற்கொண்ட பணிகளும் வீணாயின. பிறகு இந்திரன் வெறுப்பூட்டும் வண்ணம் துர்நாற்றத்தை அந்த இடம் முழுவதும் பரவச்செய்தான். பிருகுமுனிவர் அச்செயல் இந்திரனுடையதே என்றறிந்து தன் பார்வையாலேயே அதைவிரட்டி நறுமணமுள்ள தேவதோத்யானமாக அவ்விடத்தை மாற்றிவிட்டார். பிருகுமுனிவரின் வியத்தகு செயல்கண்டு இந்திரனே வெட்கமடைந்தார். ஆங்கே தவத்திலாழ்ந்துள்ள பிருகுமுனிவரையும் சந்திக்கின்றார். அப்போது பிருகுமுனிவர் 'என் தவத்திற்கு ஊறுசெய்த உம்மை யடைவதில் பயனொன்றுமில்லை. பகவானின் ப்ரீதிக்காக நானிங்கே தவம் செய்கின்றேன். இதுவரை எனக்கு பகவான் காட்சி தரவில்லை. அவன் காட்சிகொடுக்கும்வரை நான் தவம் செய்யப் போகிறேன்' என்றார். பிருகு மொழிகேட்ட இந்திரனும் 'உமக்கு மங்கலமுண்டாகட்டும் நான் செல்வேன். சிந்தை கலக்கம் வேண்டாம். உமது விருப்பப்படி தவத்தை மேற்கொள்வீராக. எம்பெருமானது அருளும் விரைவில் கிட்டும். இத்தலத்தை நறுமணமுள்ள இடமாக உம்மால் செய்யப்பட்டது. ஆதலால் இதற்கு சுகந்தவனம் எனப் பெயர் அமையட்டும். இந்த நீர்நிலையும் பிருகு தீர்த்தம் என்ற அழைக்கப்படட்டும்' எனத்தெரிவித்து அங்கிருந்து விடைபெற்றார். மகிழ்ச்சியுற்ற பிருகுமுனிவரும் சுகந்தவனத்தில் மீண்டும் தவத்திலாழ்ந்தார். தவத்தால் மகிழ்ந்த ஸர்வேச்வரனான திருநாரணன் நீர்நிலைக்கருகில் திருமகள் மண்மகள் புடைசூழ நின்ற திருக்கோலத்தில் பிருகு முனிவருக்குக் காட்சிகொடுத்தார். எம்பெருமானைக் கண்ட பிருகுமுனிவர், ஸ்த்வபரீக்ஷை செய்வதின் பொருட்டு உம்மிடம் என்னால் அபசாரம் செய்யப்பட்டது. பரீக்ஷை செய்யலாமா? என்பதறியாது இச்செயல் மேற்கொள்ளப்

பட்டது. அபசாரமே செய்தாலும் அதைப் பொறுத் தருள்வது அனைத்து சாத்திரங்களிலும் பேசப்பட்ட ஒன்று. ஆகையால் நம்முடைய அபசாரத்தை(தீங்கினை)ப் பொறுத்தருள்வாயாக. இதைக்காட்டில் பிராயச்சித்தம் வேண்டி செயல்களைச் செய்ய நான் வலுவற்றவன்' என்று எம்பெருமானிடம் பிரார்த்தனை செய்தார். எம்பெருமானும், பரீக்ஷையில் தோஷபுத்தியை ஒருபோதும் செய்யக்கூடாது. அவ்வாறு செய்கையும் பரதத்தவ நிச்சயத்தின் பொருட்டு உலகிற்கு உதவுவதற்காகவும் அமைந்துபோயிற்று. அதனால் நற்புண்ணியமும் நல்லுலகமும் உமக்குக் கிடைக்க விருக்கிறது. என் நாபீகமலத்தில் தோன்றிய உன் தந்தை பிரம்மதேவரின் பிரீதிக்காகவும் இது நிகழ்ந்தது போலும். பிருகுமுனியே! உன் தவத்தால் மகிழ்ந்துள்ளேன். உனக்கு வேண்டும் வரத்தைக் கேட்டுப்பெறுவாயாக. ஹரியை தினமும் பூசைசெய்து மகிழ்விப்பாயாக. அதைவிட்டால் வேறுவழி உமக்குக் கிடையாது' என்றார்.

அதைக்கேட்ட பிருகுமுனிவர், 'என் மனதை ஒருபோதும் தகாத செயலில் ஈடுபடுத்தவேண்டாம். உமது தொண்டில் ஈடுபாடு கொள்ளச்செய்யுங்கள். இந்த நீர்நிலை என் பெயராலேயே விளங்கவேண்டும். இந்த நீர்நிலைக்கருகில் உமது சான்னித்யம் என்றும் நிலைத்திருக்கவேண்டும். இது என் அன்பிற்காகவன்றி அனைத்துலக உதவிக்காகவும் அமையவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். அதைக்கேட்ட ஜனார்தனன், 'பிரம்மாவும் காரணமொன்றை உத்தேசித்து இவ்விடம் மேவி அச்வமேத வேள்வியினைப் புரிவார். அது முதல் இந்த திருத்தலத்தில் எனது சான்னித்யம் உண்டாகும்' என்று கூறி மறைந்து விட்டார். மறைந்த பின் சிலகாலம் அந்த பிருகு தீர்த்தத்திற்கு அருகில் வாசம் செய்துசென்றார் பிருகு முனிவர்.

சூதமுனிவரும் 'சுகந்தவனம்' என்னும் இத்திருத்தலத்தின் பெயர் பிருகு முனிவரின் வாஸத்தால் ஏற்பட்டது. இத்தலத்தின் விஷயமாக சொல்ல வேண்டுவனவற்றை என்னால் நன்கு உரைக்கப்பட்டது. இதற்கு மேலும் ஏதேனும் கேட்க விரும்புகிறீர்களா' என்று ரிஷிகளிடம் வினாவெழுப்பியவாறே இவ்வத்தியாயத்தை நிறைவேற்றுகிறார்.

இத்துடன் ஸ்ரீபிரம்மாண்டபுராணம் - தலபுராணம் கூறும்பகுதியில் 11வது நூறாக விளங்கும் (முதல்அத்தியாயம் எனும்) இவ்வத்தியாயம் இனிதே நிறைவுறுகின்றது.

இரண்டாம் அத்தியாயம்

ரிஷிகள்-

'ஸத்யலோகத்தில் இருந்த பிரம்மா எதற்காக எக்காரணத்தைக்கொண்டு இங்கே அச்வமேத வேள்விதனைப் புரிந்தார்? என்பதனைக் கூறுங்கள்' என்று சூதரை வேண்டினர்.

சூதமுனிவர்-

'பிரம்மதேவர் இங்கே அச்வமேதம் இயற்றிய காரணத்தையும் அதன் பயனையும், கூறுகின்றேன். கவனமாக அதைக் கேளுங்கள்' எனத் தொடங்குகிறார். குபேரபுத்திரருள் ஒருவர் நளகூபரர். நளகூபரருக்கு ரம்பை, கந்தர்வி என இரு மனைவியர்கள். ஒருசமயம் அவர்களுள் அழகிற்சிறந்தவர் யாரென சண்டை ஏற்பட்டது. உலகில்

என்னைப்போல் அழகி ஒருவருமில்லை. என் கால்தூசிக்கு உனது அழகு ஈடாகாது என சண்டையிட்ட இருவரும் நளகூபரனை அடைந்தனர். நளகூபரனும் ரம்பை மேல் அதிகப் பற்றுடையவனாயினும் தான் அதிகமாக நேசிப்பது கந்தர்வியையே என்று விளையாட்டாகத் தெரிவித்தான். அதைக்கேட்ட ரம்பா கோபமுற்றவளாய் கணவனை விட்டகன்றாள். நளகூபரனும் ரம்பையின் பிரிவாற்றாமையால் வருந்தியவனாய் பிரம்மதேவரை அடைந்தான். ரம்பைக்கு நிகரான மற்றொரு பெண்ணை ஸ்ருஷ்டி செய்ய அன்புடன் அவரை வேண்டினான். குபேர தனயனால் வேண்டப்பட்ட பிரம்மதேவர் பெருத்த முயற்சியோடு ரம்பைக்கு அதிகமான அழகில் ஒரு பெண்ணை படைத்தார். அவள் கருமைநிறம், அழகிய முகம், கொடி போன்ற மெல்லியமேனி, சுருண்டிருண்டகுழல், ஆம்பல் போன்ற கண்கள், மென்மையான உதடுகள், எள்ளுப்பூவைப் போன்ற மூக்கு, அழகிய புருவங்கள், புன்னகை தவழும் முகம், மிருதுவான கொடி போன்ற கைகள், பருத்தும் உயர்ந்ததுமான கொங்கைகள், நீர்சுழற்சியை அறியப்படுவது போன்ற நாபி, மும்மடிப்பைப் பெற்ற வயிற்றுப்பகுதி, கண்டுங்காணாதது போல் விளங்கும் இடை, வனப்போடு கூடிய பிருஷ்டபாகம், வாழைமட்டை போன்ற தொடைகள், அன்னம் போல் மெல்ல நடை ஆகியவற்றுடன் இதற்குமுன் கண்டிராத வகையில் அமைந்தது அந்த அற்புத ஸ்ருஷ்டி. ஆங்கே அவர் இன்பம் துய்த்துவிடுகிறார். அந்த பாபச்செயலிலிருந்து விடுபட காவிரியின் வடகரைத் தலமான சுகந்தவனத்திற்கு வருகின்றார். சுகந்தவனத்தில் ஸ்ரீமன் நாராயணனை புருஷசூக்தத்தால் தோத்திரம் செய்கின்றார். எம்பெருமானும் பிரம்மதேவரின் முன்னே

தோன்றி 'உம்முடைய தவறான செயலை யாமறிந்தோம். நீவிர் அனைத்து பாபங்களுக்கும் கழிவிடையாக விளங்கும் அச்வமேத வேள்வியினைப் புரியவேண்டும். அதற்குரிய யாகஸ்தானத்தை உமக்குத் தெரிவிக்கின்றேன். நாவலம் பெரிய தீவினில் பாரதத்தில், தென்கடலின் தீரத்தில், சோழ தேசத்தில் காவேரி பிரவஹிக்கின்றது. இரு பிரிவுகளாய் திகழ்கின்ற தென்வட (காவிரி&கொள்ளிடம்) திருக்காவேரி களின் நடுப்பகுதியில் விளங்குவதும், கும்பகோணத்திற்கு வடக்கில் குரோசத் தொலைவிலுள்ளதும், ப்ருகுமுனிவரால் சுகந்தவனம் எனப்பெயரிடப்பெற்றதும், எனக்கு மிகவும் பிடித்ததுமான அந்த க்ஷேத்திரத்தில் அச்வமேத வேள்வியைச் செய்வீராக. அந்த யக்ஞத்தின்போது என்னை நினைக்குங்கால் நான் ஆங்கே தோன்றுவேன்' என்று தெரிவித்தார். ஒரு முகூர்த்த கால அளவில் பிரம்மதேவர் சுகந்தவனத்தைச் சென்றடைந்தார். வேள்விச்சாலை அமைக்க, விச்வகர்மாவையும், மயனையும் பிரம்மதேவர் நினைக்க உடன்தோன்றி அவர்கள் வேள்விச்சாலையை அமைத்தனர். பிரம்மதேவரின் மனைவியர் காயத்ரீ, சாவித்ரீ, சரசுவதி ஆகியோரும் உடனிருக்க, பல முனிவர்கள் புடைசூழ அச்வமேத வேள்வியும் நடந்தது. வேள்வியின் குறிப்பிட்ட சமயத்தில் திருமகள் மண்மகள் புடைசூழ திருமாலும் ஆங்கே எழுந்தருளினார். பிரம்மதேவர், 'அச்வமேத வேள்வியானது உன்னை உத்தேசித்தே இங்கு இயற்றப் பட்டது. என் பாபங்களையும், இங்கே உன்னை வணங்குபவர்களின் பாபங்களையும் போக்கியருள்வாயாக. இந்த தலமும் என்னால் சிறப்படையட்டும்' என்று மொழிந்ததைக்கேட்டு, எம்பெருமானும் 'உமது பாபமனைத்தும் இவ்வேள்வியால் அகன்றது. உனது பிரீதிக்காகவும், பிருகுமுனிவருக்காகவும், லோக ஸம்ரக்ஷணத்

திற்காகவும் நான் கல்பகாலம் வரை இங்கு எழுந்தருளி யிருப்பேன். காலங்காலமாக நீவிரும் என்னை அர்ச்சிப்பீராக. வைகானஸ ஆகமப்படி இந்த தேவஸ்தானத்தை நிறுவி, அதில் என்னையும் பிரதிஷ்டை செய்தும் நீர் வழிபடுவீராக' எனத்தெரிவித்தார்.

அச்வமேத வேள்வி முடிந்த பின் ரிஷிகள், தேவர்கள் ஆகியோர் இந்த நீர்நிலையில் அவபிருத ஸ்நானம் மேற்கொண்டனர். பிருகுமுனிவரின் ஸ்நானத்தால் பிருகு தீர்த்தமான அதுவே வேள்விமுடிந்து பிரம்மதேவரால் அவப்ருதஸ்நானம் செய்தபடியால் 'பிரம்மதீர்த்தம்' என்ற பெயரையும் பெற்றது. 'சுகந்தவனம்' என்பது பிருகு முனிவரால் ஏற்பட்டது. இது எனது கட்டளையால் 'பிரம்மபுரம்' என்றும் அழைக்கப்படட்டும். எம்பெருமானின் சௌந்தர்யாதிசயத்தால் ஆச்சர்யமான அழகினாலும் எனது வேண்டுகோளாலும் இத்தலத்துறைநாதன் 'சுந்தரன்' என்றே அழைக்கப் படட்டும். அந்தநாள் தொடங்கி அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் புரியும் ஒவ்வொருவரும் தன் பாதகங்கள் நீங்கப்பெற்றனர். வேள்வியும் இனிது நிறைவுற்றது. தேவர்களெல்லாரும் தத்தம் இருப்பிடம் சென்று சேர்ந்தனர். பிரம்மதீர்த்தத்தின் முன்பாகத்தில் பிரம்மதேவர் தினமும் சுந்தரனைத் தொழுது வருகின்றார்' என்றவாறே இவ்வத்தியாயத்தை நிறைவேற்றுகிறார்.

இத்துடன் ஸ்ரீபிரம்மாண்டபுராணம் - தலபுராணம் கூறும்பகுதியில் 12வது நூறாக விளங்கும் (இரண்டாம் அத்தியாயம் எனும்) இவ்வத்தியாயம் இனிதே நிறைவுறுகின்றது.

*****

மூன்றாம் அத்தியாயம்

ரிஷிகள் சூத முனிவரைப்பார்த்து, 'பிரம்ம தீர்த்தத்தினுடைய பெருமை, நீராட்டத்தால் வரும் பயன், நீராடுவதற்கு விதிமுறை ஆகியவை குறித்து விளக்கமாகக் கூறுங்கள்' என்று வேண்டினர்.

சூதமுனிவர் கூறுகிறார் -

விந்த்ய மலையின் கீழ்ப்பகுதியில் புகழ்பெற்ற ஆறு ஒன்று ஓடுகிறது. மகாநதி என்ற பிரசித்தமான அந்த விமலையின் கரையில் அவந்தீ என்றதொரு நகரமுண்டு. அங்கே குசிகர் என்பவர் வாழ்ந்து வந்தார்.

புண்டரீகர் என்பவர் அவரது புதல்வர். புண்டரீகர் தன் தாய் தந்தையருக்குப் பணிவிடைசெய்து மனையாளுடன் மகிழ்ச்சியாக காலங்கடத்தி வந்தார். ஒருசமயம் அவருக்கு தீர்த்தயாத்திரை மேற்கொள்ள விருப்பமேற்பட்டது. மனைவியாலும் பெற்றோர்களாலும் துயருற்ற அவர் தீர்த்தயாத்திரையிலிருந்து வெளிப்பட்டு தானாகவே நெடுதூரம் சஞ்சரிக்கலானார். அவ்வாறு காவேரி தீர்த்த ஸ்நானத்தின் பொருட்டு தென்திசை நோக்கிச்சென்றார். ஸ்ரீமுஷ்ணத்தில் தீரத்தஸ்நானமும் தலவாசமும் அவர் மேற்கொண்டார். காவேரியைக் காணும் விழைவோடு காட்டுவழியில் சஞ்சரித்தார். வெப்பம் தகிக்கிறது. தங்குமிடம் தேடுகிறார். பூச்செடிகள், காட்டுமரங்கள், பலவகைப்பறவைகள் எங்கும் சூழ்ந்துகிடக்க நறுமணக்

காற்று வீசுவதையும் உணர்கின்றார். பின் அந்த புண்டரீகன் சுத்தமாயும் அழகாயும் அமைந்ததொரு நீர்நிலையைக் கண்டான். அதன் கரையில் ஒரு சண்டாள கன்னிகையையும் பார்த்தான். கருங்கூந்தல், அழகிய புருவங்கள், அழகிய மூக்கு, தாமரை இதழ்போல் நீண்ட கண்கள், சுருண்டிருண்ட குழல்கள், குயில் போன்ற மொழி இனிமையான ஒலி, புன்னகை, புதிதாய்ப்பூத்த தாமரைபோன்ற முகப்பொலிவு, சிரீஷம் போன்ற மெல்லியதான மேனி, நீண்ட கொடி போன்ற கைகள், எதிரியை நிரந்தரமாய் எதிர்த்து நிற்குமாப்போலே பருத்தெழுந்த கொங்கைகள், அவற்றின் சுமை தாங்கவொண்ணாது சற்றே வளைந்த உடல், சிறு குளம் போன்ற உந்தி, வலித்ரயம் என்ற மும்மடிப்புள்ள இடை, காடின்யமான பிருஷ்டபாகம், மெலிந்தும் குளிர்ந்துமுள்ள நீண்ட வாழைமரத்தையொத்த தொடைப்பகுதிகள், தாமிரம் போன்று ஜொலிக்கும் மேனி, மதங்கொண்ட யானையைப்போல் நடை, கருமை குறைவற்ற உடல்வனப்பு, அணிகலன்களாலே மெருகூட்டிய தேகம் அவ்வாறு அமைந்த அந்த சண்டாள கன்னிகையை பிரம்மதேவனின் படைப்பில் ஓர் அற்புத சிருஷ்டி என்றே கூறலாம். அத்தகையதோர் பெண்மணியை மூவுலகிலும் காண்பதரிது. பார்ப்போரின் நெஞ்சத்தை கொள்ளை யடிக்கின்றதான பார்வை. அழகோடும் அணித்தான நாணம். மொத்தத்தில் ஸர்வலக்ஷணங்களின் கூட்டுருவம்.

அசுத்த பூமியில் தோன்றியிருப்பினும் கேட்டதை அருளும் கற்பகக்கொடி போன்றவள். பதினாறு வயதே நிரம்பிய பருவம். இதற்குமுன் இதுபோன்றறியாத நளினம். மொத்தத்தில் அரியதோர் படைப்பாதலால் புண்டரீகர் அவளிடம் தன்மனதைப்பறிகொடுத்தார். பாபமனைத்தையும் அறிந்தவரே ஆயினும் காமத்தால் பீடிக்கப்பட்ட அந்த வேதியரின் மீது அவளுக்கும் காதல் பிறந்தது. நெடிதின்பமும் துய்த்தனர். பெற்றோர்களும் கண்டுகொள்ளவில்லை. அவர்களும் சுற்றத்தை மறந்தனர். பயனாக 4 புதல்வர்களையும் பெற்றெடுத்தனர். காக்க வழியின்றி களவுத்தொழிலில் ஈடுபட்டார் புண்டரீகர். இருப்பினும் புண்ணியத்தின் பயனாய் காவிரியின் தென்கரையில் அமைந்த சுகந்தவனத்திற்கு வந்தார். களவு செய்து, காப்பாளர்களால் பிடிக்கப்பட்டு கடைசியில் பிரம்மகுண்டத்தில்(பிரம்மதீர்த்தத்தில்) குதித்து உயிரையும் மாய்த்துக்கொண்டுவிடுகிறார். அந்த உடலைப் பார்த்த சிலர் இவரை அந்தணர் என்றும், அந்தணரல்லர் என்றும் கூறிக்கொண்டிருக்க, ஒரு சண்டாளப்பெண், 'இவரது செயலுக்கு இவரைக் கழுதையின் காலில் கட்டி இழுங்கள்' என்றாள். இப்படிப்பேசிக்கொண்டிருக்கையில் அசரீரிமொழி செவிமடுக்கப்பெற்றது. 'அந்த அந்தணரிடத்தில் சிறிதும் பாபம் கிடையாது. அவரது பாபங்களெல்லாம் பிரம்மதீர்த்தத்தின் நீராட்டத்தால் கழிந்தன. அந்த தீர்த்தம் தான் முதலில் பிருகுமுனிவரால்

நீராடப்பெற்ற பெயருடன் பிரம்மதேவரால் 'பிரம்மகுண்டம்' ஆயிற்று. விருப்பமற்று தொட்டாலும் தீ சுடுமாப்போலே* பாபங்களனைத்தையும் ஒழிக்கவல்லது இந்த பிரம்மதீர்த்தம். பிரயாகைக்கு ஒப்பாக விளங்குமிதில் நீராடுவோர்களின் பாபங்கள் அகலுகின்றன. இந்த வேதியரும் இத்தீர்த்த நீராட்டத்தின் சிறப்பால் சுவர்க்கம் செல்வார். பின்பும் இந்த கர்மபூமியில் ஒரு செல்வந்தர் வீட்டில் பிறப்பார். இந்த சண்டாள கன்னிகையும் மறுபிறவியெடுத்து அந்த வேதியருக்கு மனைவி ஆவதுடன் மீண்டும் அப்புதல்வர்களையே புத்திரர்களாகப்பெறுவாள். என் மொழிகளை நம்பு' என்று கூறி, அசரீரி வாக்கு ஓய்ந்தது. உடனே வானில் ஆயிரம் கதிரவனுக்கு ஒப்பான ஒளியோடு ஒரு திவ்யவிமானம் தென்பட்டது. வானவர்களும் காணப்பட்டனர். தேவதுந்துபி வாத்யங்கள் முழங்கின.

பூமாரிபொழிந்தது. அசரீர வாக்கின்படி புண்டரீகர் சுவர்க்கம் அடைய திவ்யவிமானமும் மறைந்தது.

இதனால் பெருமையுற்றது பிரம்மதீர்த்தம் பிராம்மணரும் புகழ் எய்தி, பிருகுதீர்த்தம் ஆடிய பெருமையும் வளர்ந்தது. சுவர்க்கம் புகுந்த பிராம்மணரையும் பிரம்மதீர்த்தத்தையும் இந்த்ராதி தேவர்கள் புகழ்ந்தனர்.

சூதமுனிவரும் 'இந்த பிருகு தீர்த்தத்தின் பெருமைதனை குருபதேசம் பெற்றபடி ரிஷிகளுக்கு விரிவாக விளம்பப்பெற்றது'

* 'அறியாமல் தொட்டாலும் அக்னி சுடுமதுபோல' என்று நாரதரைக்குறித்து ஆதிசேஷனின் மொழியாக ஸர்வபுராண ஸார ஸங்க்ரஹத்தில் காணப்படுகிறது. ஸர்வபுராண ஸார ஸங்க்ரஹம் பிற்சேர்க்கை 4. IV a. யில் கொடுக்கப்பட்டுள்ளது.

என்றும், 'இந்த சுகந்தவனப் பெருமையைக் கேட்டு பிரசங்கம் செய்பவர் விஷ்ணுவின் அருளால் வலிமை பெறுவர். பகவத் சன்னிதியில் படிப்பவர் கேட்பவர் பாபமனைத்திலிருந்தும் விடுபடுவர். இந்த ஆக்யானம் உரைத்த எமக்கும் அதற்கு தூண்டுகோலான உங்களுக்கும் மங்களம் உண்டாகட்டும்' எனக்கூறி இவ்வத்தியாயத்தை நிறைவேற்றுகிறார்.

இத்துடன் பிரம்மாண்டபுராணம் -
க்ஷேத்திர காண்டத்தின் சுகந்தவன மாகாத்மியத்தில்
13வது நூறான (மூன்றாம் அத்தியாயம்)
இந்தஅத்தியாயத்துடன் இத்தலப்பெருமையும்
நிறைவுறுகின்றது.

ஸ்ரீ பூமிநீளா உடனுறை ஸ்ரீசௌந்திரராஜருக்கும்
ஸ்ரீராமருக்கும், ஸ்ரீகிருஷ்ணருக்கும் நமஸ்காரம்
ஹரி:ஓம். மங்களமுண்டாகட்டும்.

சௌம்ய வருடம், சித்திரை மாதம், 14ம் தேதி
ஸ்ரீபுரந்தானிலே இருக்கும் வைகானஸசூத்திரத்தைப்
பின்பற்றிவந்தவரான வெங்கடராமனின் மகன்
வேங்கடவரதன் தன் கையால் எழுதப்பட்டது.

சுபமஸ்து

श्रीः

2. सुगन्धवनमाहात्म्यम् *

प्रथमोऽध्यायः

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

सुरासुरशिरोभागविलसन्मकुटार्पितम् ।
सुगन्धवननाथस्य विष्णोर्जयति शासनम् ॥

रामं श्यामाभिरामं रविशशिनयनं कोटिसूर्यप्रकाशं-
दिव्यं दिव्यास्त्रपाणिं शरमुखशरधिं चारुकोदण्डहस्तम् ।
कालं कालाग्निरुद्रं रिपुकुलदहनं विघ्नविच्छेददक्षं
भीमं भीमाट्टहासं सकलभयहरं श्रीरामचन्द्रं भजेहम् ॥

श्री सौन्दरराजाय नमः । श्री रामाय नमः ।

ऋषयः –

कुम्भको(घो?)णस्य माहात्म्यं तीर्थानां च विशेषतः ।
त्वत्तःश्रुतं महाप्राज्ञ सूत पापप्रणाशनम् ॥

तीर्थेषु कथ्यमानेषु त्वया तत्र विशेषतः ।
कावेर्याश्चोत्तरे तीरे वर्णितं च भृगोस्सरः ॥

---

* B.11318/D.10545. T.MS.S.M.Library, Thanjavur

वैभवं तस्य तीर्थस्य वद गा(ता?)वद्गुणेऽधुना ॥

श्रीसूतः –

साधुपृष्टं महाप्राज्ञा मुनयः संशितव्रताः ।
भृगुतीर्थस्य माहात्म्यं शृण्वतां पठतां सदा ॥
सर्वपापप्रशमनं सर्वाभीष्टप्रदं नृणाम् ।
यत्र तप्त्वा भृगुः पूर्वं विनिर्मुक्तोख(ऽघ?)बन्धनात् ॥
तस्य तीर्थस्य माहात्म्यं वक्ष्यामि श्रुणुतादरात् ।
पुरा सरस्वतीतीरे समवेता महर्षयः ॥

दीर्घसत्रं क्रतुवरं चक्रिरे ब्रह्मवित्तमाः ।
तेषां कर्मान्तरे तत्र वितर्कस्समभूत्तदा ॥

त्रिष्वधीशेषु कः श्रेष्ठः को वा सत्वगुणाधिकः ।
तं ज्ञप्तये भृगुं सर्वे प्रेषयामासुरञ्जसा ॥

महर्षीनभ्यनुज्ञाप्य सोभ्यगाद्ब्रह्मणस्सभाम् ।
देवर्षिगणमध्यस्थं ब्र(ब्र?)ह्माणं पितरं भृगुः ॥

न ववन्दे न चक्रे च स्तोत्रं प्रह्वणमादरात् ।
उद्वृत्तेऽथ भृगौ ब्रह्मा प्रज्वलन् स्वेन तेजसा ॥

चुक्रोध तं विधिं दृष्ट्वा शपयाञ्चक्रिरे सुराः ।
रजो गुणान्वितं मत्वा पितरं चतुराननम् ॥

शशाप मर्त्यलोकेषु पूजा ते न भविष्यति ।
इति शप्त्वा भृगुः पश्चात् कैलासं रजताचलम् ॥

जगाम तत्र पार्वत्या चिक्रीड भगवान् शिवः ।
रहस्या(स्य?)भ्यागतं विप्रं दृष्ट्वापि परमेश्वरः ॥

नोपारमदृतेश्शम्भुः तं च हन्तुं प्रचक्रमे ।
पादौ गृहीत्वा तं शर्वं सान्त्वयामास पार्वती ॥

भृगुश्शाप सहसा निर्लिङ्गस्त्वं भविष्यसि ।
अथ तं तामसं मत्वा वैकुण्ठमगमद्भृगुः ॥

तपसा द्योतमानं तं दृष्ट्वा शापभयेन तौ ।
चण्डप्रचण्डौ संरोद्धुं नशेकतुररिन्दमौ ॥
अन्तःप्रविश्य विप्रर्षिः दृष्टवान् हरिमव्ययम् ॥
शयानं श्रियमुत्सङ्गे योगनिद्रा समाश्रितम् ।
वक्षस्यताडयत्कोपाद्देवदेवं जगत्पतिम् ॥

तत उत्थाय भगवान् पर्यङ्कादवरुह्य सः ।
नत्वा भृगुं पदौ तस्य करैःसंस्पृश्य सादरम् ॥
भवदागमनं ब्रह्मन् न जाने ब्रह्मनन्दन ॥
ततो(तदा?)लक्ष्म्या निषण्णोहं रहस्ये क्षन्तुमर्हसि ॥
भवत्पादरजस्सङ्गात् पूतोऽहं स चराचरः ॥
उरस्थिता महालक्ष्मी शोभतेऽप्यश्रि(श्रि?)क्कं सदा ॥

नारायणेऽवदत्येवं भृगुः बाष्पाकुलि(ले?)क्षणः ।
भक्त्या मेनेऽधिकं विष्णुं हरिं सत्वगुणाश्रितम् ।।

मुनीनामग्रतो गत्वा याथातथ्यमवर्णयत् ।
तेऽपि श्रुत्वा मुनिवराः भृगुवाक्यमकल्मषम् ।।

अभजन्देवदेवेशं नारायणमनामयम् ।
ततश्चिन्ता समभवद्ब्रह्मपुत्रस्य चेतसि ।।

बालिशोऽहमहं मूढो येनाकृत्यमिदं कृतम् ।
नारायणः परंब्रह्म ! पादेनोरसि ताडितः ।।

अकृत्यं च परीक्षार्थं न कर्तव्यं कदाचन ।
मातृयोनिपरीक्षायाः तुल्यमेतदुदाहृतम् ।।

किं कृतं सहसा मोहान्मया सर्वेश्वरे हरौ ।
सर्वशास्त्रार्थविज्ञानं मामकं च क्व तद्गतम् ।।

न विद्यते मनः शान्तिः तिष्ठतो मे तपस्यपि ।
क्वनु स्यान्मनसः शान्तिः कुत्र देशे व्रजाम्यहम् ।।

इत्येवं शोचतस्तस्य पुरः प्रादुरभूद्द्विजः ।
भृगुं चैवाब्रवीद्विप्रः स्मयमानमुखाम्बुजः ।।

मुने त्वमार्तवद्भासि शोचसे केन हेतुना ।
सर्वज्ञ इव धीरस्त्वं वर्तसे पश्यतां पुनः ।।

शोकहेतुं ममाचक्ष्व नाशयाम्यहमद्य तम् ।
इति तस्य वचःश्रुत्वा प्रीतो भृगुरुवाच तम् ।।

देवैः सञ्चोदितेन प्राक् त्रिष्वधीशेषु को महान् ।
इति जिज्ञासुना पापं कृतं विष्णौ ममात्मनि(ना?) ॥

अनुवादे कृते तस्य श्रृण्वतामपि पातकम् ।
कस्मिन्कृते स्याद्विप्रेन्द्र तस्य पापस्य निष्कृतिः ॥

भवेच्च मनसः शान्तिः कस्मिन्देशे स्थितस्य मे ।
एवं पृष्ठं द्विजः प्राह भृगुं दुःखसमन्वितम् ॥

कृतं लोकोपकाराय परतत्वावधारणम् ।
अकृत्यबुद्धिः कर्तव्या त्वया नात्र परीक्षणे ॥

यदि विष्णुपरीक्षायां दोषबुद्धिर्दृढा तव ।
तदा तद्दोषशान्त्यर्थं उपास्व हरिमव्ययम् ॥

सिद्धिक्षेत्रं तवाख्यास्ये शान्तं यत्र मनस्तव ।
अस्ति कश्चन भूभागे चोलो जनपदो महान् ॥

तत्र प्रवहते द्वेधा कावेरी सरितां वरा ।
दक्षिणोत्तरकावेरी मध्यदेशं समाश्रितम् ॥

कुम्भको(घो)णोत्तरे देशे क्रोशमात्रेण च स्थितम् ।
बहुवृक्षसमाकीर्णं काननं विजनं मुने ॥

तस्योद्यानसमानस्य मध्ये विकचपङ्कजम् ।
सरः प्रसन्नतोयाढ्यं विद्येतेऽतिमनोहरम् ॥

सरसः तस्य पूर्वस्मिन् तीरे स्थित्वा तपश्चर ।
तत्र स्थितस्य ते ब्रह्मन् मनः शान्तं भविष्यति ॥

एवमुक्त्वा मुनिं विप्रः तत्रैवान्तरधीयत ।
तस्मिन्नन्तर्हिते विप्रे मुनिस्सन्तुष्टमानसः ॥

द्विजोक्तमेवं तं देशं जगामातिमनोहरम् ।
तत्र स्थित्वा सरस्तीरे मुनिर्नियतमानसः ॥

नित्यं त्रिषुवणस्नायी तपश्चक्रे सुदारुणम् ।
तपश्चरति तत्रैवं भृगौ नियतमानसे ॥

इन्द्रस्य भयमायातं स्वपदभ्रंशशङ्कया ।
ततः सम्प्रेषयामास तपोविघ्नाय वासवः ॥

ऊर्वशीप्रमुखान् सर्वान् स्वाधीनानप्सरो गणान् ।
अथ तत्रागतास्सर्वाः स्ववेश्या ऊर्वशीमुखाः ॥

उपचक्रमिरे कर्तुं तपोविघ्नं समाहिताः ।
निगृहीतेन्द्रिये तस्मिन् प्रणिधानपरे मुनौ ॥

उद्यमा निष्फलास्तासामभवन्दैवयोगतः ।
निष्फलेऽप्सरसां जाते सर्वोद्योगे शचीपतिः ॥

पूरयामास तं देशं येनायं स्याज्जुगुप्सितः ॥
प्रणिधानपरस्यास्य मुनेरात्मरतस्य च ॥

पूतिगन्धानभिज्ञानात् कालाश्च बहवो गताः ॥
प्रणिधानादुपरतो दृष्ट्वा चेष्टां शचीपतेः ॥

नाशयामास दुर्गन्धं व्याप्तं तत्र मुनिः क्षणात् ॥
तदालोकनमात्रेण दिव्यगन्धाभिपूरितम् ॥

तदुद्यानमभूत्सर्वं दैवतोद्यानसन्निभम् ।
भृगोः कर्माद्भुतं दृष्ट्वा व्रीलितोयं शचीपतिः ॥

दिव्यगन्धयुतं देशं तमेव भगवान्स्वयम् ।
मुनिर्दृष्ट्वेन्द्रमायान्तं प्राह सन्तुष्टमानसः ॥

नैवाहं त्वत्पदाकाङ्क्षी येन ते भयमागतम् ।
भगवत्प्रीतिमुद्दिश्य मयैवं क्रियते तपः ॥

एतावता च कालेन न प्रसन्नो हरिर्मम ।
प्रादुर्भावो हरेर्यावत्तावन्मे तपसि स्थितः(तिः?) ॥

भृगोस्तद्वचनं श्रुत्वा देवेन्द्रः प्राह तं पुनः ।
स्वस्ति तेऽस्तु गमिष्यामि यथाकामं तपः कुरु ॥

निर्वेदो मनसो माभूद्विष्णुः प्रादुर्भविष्यति ।
दिव्यगन्धयुतं अस्मात् क्षेत्रमेतत्त्वयाकृतम् ॥

सुगन्धवनमित्यस्य नामधेयं भविष्यति ।
एतस्य सरसोऽप्यस्तु भृगुतीर्थमिति प्रथा ॥

इत्युक्त्वेन्द्रे विनिष्क्रान्ते मुनिस्सन्तुष्टमानसः ।
सुगन्धवनभूद्देशे तपश्चक्रे सुदारुणम् ॥

तपसा तोषितस्तस्य मुनेः सर्वेश्वरो हरिः ।
तस्यैव सरसस्तीरे प्रादुरासीत्पुरा मुनेः ॥

पार्श्वद्वयेऽपि देवीभ्यां लक्ष्मीभूभ्यां सह स्थितम् ।
दृष्ट्वासौ प्रणिपत्यैवं मुनिर्वचनमब्रवीत् ॥

अपचारः कृतो देव परीक्षां कुर्वता मया ।
ज्ञातं नात्र परीक्षायामौचित्यं मनसा हरे ॥

सहनं तेऽपचाराणां सर्वशास्त्रेषु निश्चितम् ।
अतोऽस्मदपचारस्त्वं सहस्व करुणानिधे ॥

प्रायश्चित्तेष्वशक्तोऽहं तवैव सहनादृते ।
इति प्रार्थयमानं तमुवाच हरिरीश्वरः ॥

दोषबुद्धिः न कर्तव्या परीक्षायां त्वया मुने ।
तपोधिकतया चैव तथा ब्राह्मणरूपिणा ॥

अयं लोकोपकाराय परतत्वविनिश्चयः ।
अनेन सुमहत्पुण्यं तव लोके भविष्यति ॥

मन्नाभिपद्मजातस्य वेधसः त्वत्पितुस्सदा ।
तस्य तत्प्रीतये भूयो जायते तद्वदेव मे ॥

भृगो तव प्रसन्नोऽस्मि वरं वरय सुव्रत ।
अर्चयस्व हरिं नित्यं तं विना गतिरस्ति ते ॥

भृगुः –

श्रुत्वा भगवतो वाक्यं मुनिः प्रीतिपुरस्कृतः ।
वरं वव्रे महाभागश्चतुराननसम्भवः ॥

न कदाचिदकृत्येषु मानसं मे प्रवर्तताम् ।
प्रवर्ततां च कैङ्कर्ये तवैव मधुसूदन ॥

इदं सरस्तु मन्नाम्ना लोके ख्यातिं गमिष्यति ।
तस्मादस्मिन् सरस्तीरे नित्यं सान्निध्यमस्तु ते ।।

सर्वलोकोपकाराय मम च प्रीतये हरे ।
इति तद्वचनं श्रुत्वा भृगुमाह जनार्दनः ।।

किञ्चिदुद्धिश्य स ब्रह्मा वाजिमेधं करिष्यति ।
ततः प्रभृति देशेऽस्मिन् सान्निध्यं मे भविष्यति ।।

इत्युक्त्वा वचनं विष्णुः तत्रैवान्तरधीयत ।
अदर्शनं गते विष्णौ तस्यैव सरसस्तटे ।।

कञ्चित्कालमुषित्वासौ यथेष्टं विचचार ह ।
सुगन्धवनमेवं हि भृगुणाधिष्ठितं पुरा ।।

सुगन्धवननामापि प्राप्तमेवमिहामुना ।
सुगन्धवनभूदेशे विषये भवतां मया ।।

वक्तव्यमखिलं सूक्तं किं भूयो श्रोतुमिच्छथ ।।

इति श्रीब्रह्माण्डपुराणे क्षेत्रकाण्डे
सुगन्धवनमाहात्म्ये एकादशशततमोऽध्यायः(प्रथमोऽध्यायः) ।

अथ द्वितीयोऽध्यायः

ऋषयः –

सत्यलोके स्थितो ब्रह्मा किमर्थं केन हेतुना ।
अश्वमेधं चकारात्र पृच्छतां नो वद प्रभो ॥

सूतः –

अत्राश्वमेधकरणे ब्रह्मणः परमेष्ठिनः ।
वक्ष्ये फलं निमित्तं च सावधानं निशा(श?)म्यताम् ॥

कुबेरस्य सुतः कश्चित् नाम्नासौ नलकूबरः ।
तस्य भार्याद्वयं रम्भा गन्धर्वतनयापरा ॥

तयोरासीत् स्वसौन्दर्यविषये कलहोद्धुतः ।
लोके सीमन्तिनी काचिन्मादृशी न च विद्यते ॥

मत्पादरजसा तौल्यमपि त्वयि न विद्यते ।
एवं विवदमाने द्वे नलकूबरमीयतुः ॥

स च रम्भानुरक्तोऽपि तदुत्कर्षे च सत्यपि ॥

ऊचे रम्भाधिकामेनां गन्धर्वीमेव लीलया ।
पत्युस्तद्वचनं श्रुत्वा रम्भाकोपसमन्विता ॥

तदा परुषितं कान्तं तं विहाय विनिर्गता ।
सोऽपि रम्भावियोगेन दुःखसन्तप्तमानसः ॥

सोढ्वा कथञ्चित् तद्दुःखं समीपं ब्रह्मणो गतः ।
रम्भातुल्यां स्त्रियं स्रष्टुं प्रार्थयामास सादरम् ।।

कुबेरतनयेनैवं प्रार्थितः कमलासनः ।।
ससर्ज बहुयत्नेन कांश्चित् रम्भाधिकां स्त्रियम् ।
श्यामां सुवदनां तत्वीं नीलकुञ्जितमूर्धजाम् ।।

नीलोत्पलपलाशाक्षीं पक्वबिम्बफलाधराम् ।
तिलपुष्पोल्लसन्नासां सुभ्रुवां चारुहासिनीम् ।।

मृदुबाहुलतोपेतां पीनोन्नतपयोधराम् ।
नाभिदेशजितावर्तां त्रिवली भ्राजितोदराम् ।।

दृश्यादृश्योल्लसन्मध्यां नितम्बजितसैकताम् ।।

कदलीकाण्डतुल्योरुद्वयकान्तिविभूषिताम् ।
आताम्रचरणाम्भोजां राजहंसाभिगामिनीम् ।।

अदृष्टपूर्वां लोकेषु तरुणादित्यसन्निभाम् ।
दृष्ट्वा तामद्भुताकारां किञ्चिद्विकृतमानसः ।।

अवलम्बित धैर्योऽपि ब्रह्मा तस्यां मनोदधे ।
दुहित्रैव तया सार्धं विधिःकामविमोहितः ।।

निर्लज्जः सङ्गतिश्चक्रे पश्वादिभ्यो विशेषतः ।
ब्रह्मणस्तादृशं कर्म दृष्ट्वासौ नलकूबरः ।।

तत्र तां सम्परित्यज्य गत एव यथागतम् ।
बहुकालं तया सार्धं क्रीडित्वोपरतां(तो?)विधिः ॥

निर्वेदमगमद्पश्चात् निनिन्दात्मानमात्मना ।
अहो मौढ्यमिदं प्राप्तं मयेदमविशङ्कितम् ॥

मत्प्रसूता मयैवेयं भुक्त्वा कमललोचनाम् ।
कामस्य विजयो लोके पुरुषाणां हि दुर्लभः ॥

कृत्याकृत्य विवेकोपि कामान्धस्य न विद्यते ।
एवं जाते मया किं वा कार्यं कुत्र व्रजाम्यहम् ॥

इत्येवमनुतापेन शोचतः परमेष्ठिनः ।
विष्णोः सकाशं गच्छेयं इति बुद्धिरजायत ॥

ततःक्षीरांबुधेर्ब्रह्मा तीरमुत्तरमाश्रितः ।
पौरुषेणैव सूक्तेन स्तोत्रयामास पूरुषम् ॥

ततः प्रीतमनास्तेन स्तोत्रेण पुरुषोत्तमः ।
उवाच वेधसं तत्र पीतवासो जनार्दनः ॥

ज्ञातमेव मया पूर्वं दुहितुर्गमनं तव ।
बलवान् इन्द्रियग्रामो पुरुषस्येति मे मतिः ॥

लोके प्रसिद्धं भवति तिर्यक्सु न विचारता ।
स्त्रीपारतन्त्र्यं ग्राम्येषु धर्मेषु विहितं किल ॥

कर्मणां क्रियमाणानां विशेषो हि न विद्यते ।
कर्मवश्यतयान्येषां तल्लोपो दुरतिक्रमः ।।

तस्मात्कृतानां पापानां सम्पाद्यो हि परीक्षया ।
प्रायश्चित्तेन भागेन मदुपासनया च सः ।।

वेदेषु सर्वपापानां प्रायश्चित्तं विधीयते ।
त्वया कृतमिदं पापं गुरुतल्पसमं विदुः ।।

अश्वमेधो महान्यज्ञः सर्वपापस्य निष्कृतिः ।
अतस्त्वमश्वमेधेन कृतं पापं विनाशय ।।

अश्वमेधश्च कर्तव्यः कर्मोच्छेदस्त्वया विधे ।
यागस्थानं तवाख्यास्ये शृणु पुत्रसमाहितः ।।

जम्बूद्वीपैकदेशीये वर्षे भारतसंज्ञिके ।
दक्षिणाम्बुनिधेस्तीरे चोलो जनपदो महान् ।।

तत्र प्रवहते नित्यं कावेरी बहुधा सरित् ।
दक्षिणोत्तरकावेरी मध्यदेशं समाश्रितम् ।।

कुम्भको(घो?)णोत्तरे देशे क्रोशमात्रेण च स्थितम् ।
भृगुणाधिष्ठितं पूर्वं सुगन्धवननामकम् ।।

मत्प्रीतिकरमत्यन्तं तत्क्षेत्रं भुवि पावनम् ।
अश्वमेधाभिधं यज्ञं तत्रैवाचर गम्यताम् ।।

अहमाविर्भविष्यामि वपाहोमे स्मृतस्त्वया ।
भगवद्वचनेनैवं चोदितः कमलासनः ॥

आजगाम मुहूर्तेन सुगन्धवनमायतम् ।
सस्मार विश्वकर्माणं मयं च कमलासनः ॥

शालानिर्माणमुद्दिश्य यज्ञसम्भारमेव च ।
ब्रह्मणा स्मृतमात्रेण तावुभौ देवदर्शिनौ ॥

अतिष्ठेतां पुरो देशे ब्रह्मणः परमेष्ठिनः ।
भृगुतीर्थपुरोभागे यज्ञशालां यथाविधि ॥

चोदितौ ब्रह्मणा सम्यक् निर्मिमीते परान् गृहान् ।
परितः क्रोशमात्रेण पुरीप्रायमभूद्वनम् ॥

इन्द्रादयो लोकपाला ऋषयश्च महाव्रताः ।
देवाश्च पितरो यक्षा गन्धर्वा सिद्धचारणाः ॥

आदित्या वसवो रुद्रा मरुतोप्सरसां गणाः ।
विश्वेदेवाश्च साध्याश्च ये चान्ये देवयानेयः ॥

ते सर्वे ब्रह्मणासार्धं समागम्य व्यवस्थिताः ।
अश्वमेकं परं श्रेष्ठं बहूंश्चाप्यपरान् पशून् ॥

ये चान्ये कल्पसूत्रेषु चोदिताः पशुजातयः ।
ग्राम्यानारण्यकांस्तांश्च जलजान् पक्षिणस्तथा ॥

अन्यानपि पशूंस्तत्र कल्पयामास वासवः ।
कूबरं गो मृगाश्वौ च प्राजापत्यमिदं त्रयम् ॥

अश्वमेधस्य चैवं स्यादितरेषां यथायथम् ।
अन्येषु केचनग्राम्याः केचिदारण्यकाश्रिताः ॥

आरण्यानां परित्यागः पर्यग्निकरणे कृते ।
आलम्भस्यात्पशूनां तु ग्राम्याणामेव केवलम् ॥

वपाहोमस्त्रयाणां स्यात् पशूनां सह चोदनात् ।
वेदोक्तेन प्रकारेण सहिता विश्वकर्मणा ॥

देवास्सम्पादयांचक्रुः पात्राणि च पृथक् पृथक् ।
पालाशं खादिराश्वत्थं विकङ्कतमयं तथा ।
यागपात्राणि वेदेषु विहितानि पृथक् पृथक् ॥

यथाशास्त्रकृतायूपाः निर्मिताः विश्वकर्मणा ।
चोदिताः पशुबन्धार्थाः यूपास्तत्रैकविंशतिः ॥

षट्पालाशाश्च षड्बैल्वा खादिराश्च षडीरिताः ।
देवदारुर्भवेदेको द्वौ तु पौतु द्रुमौ श्रुतौ ॥

आपस्तम्बादयोऽध्वर्युः शाखाकर्मणि योजितः ।
जैमिन्यादय औद्गात्रे होतारश्शौनकादयः ॥

वसिष्ठप्रमुखास्त्वन्ये ब्रह्मत्वे विनियोजिता : ।
बृहस्पतिस्तु सादस्ये ब्रह्मणैव नियोजितः ॥

भृग्वादयो महात्मानो ह्यन्यकर्मणि योजिताः ।
ब्रह्मणाश्वस्य मुक्तस्य यथेष्टं चरतो भुवि ॥

देवाश्च वसवो रुद्रा रक्षां चक्रुः समाहिताः ।
ब्रह्मापि यागशालायां वीक्षितो नियतो व्रती ॥

मौनव्रतमथास्थाय मुनिभिस्सममास्थितः ।
तिस्रः पत्न्योऽपि गायत्री सावित्री च सरस्वती ॥

सदैवं पत्निभिः पत्नी शालायां सममासत ।
तत्र तत्र चरित्वा च वत्सरान्ते समागते ॥

निवृत्तायां च दीक्षायां द्विजैरुपसदः कृताः ।
माध्यन्दिनानि कार्याणि प्रवर्ग्यादीनि चक्रिरे ॥

पशवश्च स्वकालेषु संज्ञप्ता मुनिसत्तमैः ।
कृतमश्वस्य च प्राज्ञैरवदानं पृथक् पृथक् ॥

वपाहोमस्य समये मन्त्रेषूक्तेष्वनुद्रुतैः ।
याजमानो जपन्नेव चित्ते दध्यौ हरिं विधिः ॥

ततः प्रादुरभूद्विष्णुः वपास्वीकरणोद्यतः ।
श्रिया भूम्या च देवीभ्यां सहितः प्राङ्मुखस्थितः ॥

स्वीकृतायां वपायां तु विष्णुना प्रभविष्णुना ।
देवदुन्दुभ्यो नेदुः पुष्पवृष्टिश्च खाच्युता ॥

इन्द्रादीनामृषीणां च तत्रत्यानां सभासदाम् ।
विस्मयस्समभूत्तत्र समालोक्य जनार्दनम् ॥

ब्रह्मापि दृष्ट्वा देवेशं परमानन्दसंयुतः ।
हर्षगद्गदया वाचा तुष्टाव मधुसूदनम् ॥

प्रकृतौ प्रविलीनेषु महदादिषु वस्तुषु ।
त्वमेव वर्तसे नाहं नेशानो न पुरन्दरः ॥

त्वत्तोऽभूवन् प्रजास्सर्वा सृष्टिकाले समागते ।
नित्यं त्वयैव रक्ष्यं ते प्राप्नुवन्ति लयं त्वयि ॥

देवानामपि देवस्त्वं ईश्वराणामपीश्वरः ।
त्वं पितृणामपि पिता कामदानां च कामदः ॥

सर्वकर्मसमाराध्यस्त्वमेव कमलापते ।
सर्ववेदान्तवेद्यस्त्वं सर्वस्य शरणं सुहृत् ॥

सर्वभूतान्तरात्मासि सर्वभूतदयापरः ।
त्वदुपासनया सर्वे योगिनो वीतकल्मषाः ॥

शोकमोहविनिर्मुक्ता यान्ति त्वां पुरुषोत्तम ।
त्वामुपास्य मया लब्धं प्राजापत्यमिदं पदम् ॥

त्वयैव दत्तं सामर्थ्यं सृष्टिकर्मणि मामकम् ।
मधुकैटभनामानौ असुरौ वेदहारिणौ ॥

नियम्य त्वं पुरा वेदं दत्तवान् पुनरेव मे ।
ईशानस्य ममान्येषां देवानां चापदस्त्वया ॥

तेषु तेषु च कालेषु निश्शेषं विनिवारिताः ।
अकृत्येषु मम क्वापि मानसं न प्रवर्तताम् ॥

त्वत्प्रियेष्वेव कृत्येषु सर्वथा सम्प्रवर्तताम् ।
अश्वमेधोऽप्ययं यज्ञः त्वामुद्दिश्य मया कृतः ।।

अनेन क्रतुवर्येण सदा सन्तुष्टमानसः ।
पापं नाशय मे सर्वं सुताभिगमनोद्भवम् ।।

अस्मिन् क्षेत्रे सदा वासं कुरुष्व मधुसूदन ।
ये नमन्ति नरा नित्यं तेषां पापं प्रणाशय ।।

इदं क्षेत्रं क्षितितले मन्नाम्ना ख्यातिमेष्यतु ।
एवं संप्रार्थ्यमानस्य ब्रह्मणो वाक्यमुत्तमम् ।।

निशम्य लक्ष्मीरमणो वक्तुं समुपचक्रमे ।
अहं प्रीतोऽस्मि ते ब्रह्मन्नश्वमेधेन कर्मणा ।।

त्वदीयमखिलं पापं अनेनैव प्रणाशितम् ।
त्वत्प्रीत्यर्थं भृगोरर्थे लोकसंरक्षणाय च ।।

आकल्पमत्र स्थास्यामि काले काले त्वमर्चय ।
वैखानसेन विधिना स्थाननिर्माणपूर्वकम् ।।

अत्र मां संप्रतिष्ठाप्य कुर्यास्त्वं मामकार्चनम् ।
समाप्ते चाश्वमेधेऽस्मिन् ऋत्विग्भिस्सहितैःसुरैः ।।

सरस्यवभृथस्नानमत्रैव क्रियतां विधे ।
भृगुणाधिष्ठितत्वेन भृगुतीर्थमिदं श्रुतम् ।।

तव चावभृथस्नानात् ब्रह्मतीर्थमिदं भवेत् ।

सुगन्धवननाम्नोऽस्य क्षेत्रस्य तव नामतः ॥

भूयाद्ब्रह्मपुराभिख्या मम चैवानुशासनात् ।
अत्रैव विद्यमानस्य सौन्दर्यातिशयान्मम ॥

नाम सुन्दर इत्येवं प्रख्याप्यं सर्वथा त्वया ।
इतः प्रभृति तीर्थेऽस्मिन् महापातकिनो जनाः ॥

एकदा स्नानमात्रेण निर्मुक्तास्सन्तु पातकैः ।
एवं भगवता ब्रह्मा प्रोक्तस्संप्रीतमानसः ॥

शेषं समापयामास यागीयं मुनिसत्तमैः ।
पत्नीभिस्सहितो ब्रह्मा पुरन्दरमुखास्सुराः ॥

ऋत्विग्भ्यो ऋषयश्चान्ये सर्वास्तीर्थाधिदेवताः ।
देशदेशान्तरेभ्यश्च क्रत्वर्थं ये समागताः ॥

तेऽनुज्ञाप्य विधिं याता स्वस्थानानि यथासुखम् ।
ब्रह्मतीर्थपुरोभागे श्रीभूमिभ्यां समन्वितम् ॥

ब्रह्मा समर्चयामास सुन्दरं प्रत्यहं सदा ॥

इति श्रीब्रह्माण्डपुराणे क्षेत्रकाण्डे
सुगन्धवनमाहात्म्ये द्वादशशततमोऽध्यायः(द्वितीयोऽध्यायः) ।

अथ तृतीयोऽध्यायः

ऋषयः –

ब्रह्मतीर्थस्य माहात्म्यं विस्तरेण वदस्व नः ।
कः स्नात्वा फलमाप्नोति को विधिर्मज्जने वद ॥

सूतः –

विन्ध्यस्य पूर्वभागे तु विख्याता सरितां वरा ।
महानदीति विमला तस्यास्तीरे मनोहरे ॥

अवन्ती नाम नगरी पुण्या सर्वजनाश्रया ।
तस्यां द्विजन्मा कुशिकः पुण्डरीकस्तदात्मजः ॥

